## 14

# உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாகுதல்

## (4:17-32)

*எபேசியர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராய் நடந்து கொள்ள வேண்டியவர்களாயிருந்தால் (4:1, 2), அவர்கள் ஒற்றுமையாயிருக்க வேண்டும் என்பது முக்கியமானதாக இருந்தது (4:3-6, 13-16). மேலும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனிப்பட்ட ரீதியில் உள்ளத்தில் மறுரூபமாகுதலை அனுபவித்திருக்க வேண்டும், 4:17-32ல், அவர்கள் சரியான திசையில் நடக்க எப்படித் திரும்ப வேண்டும் என்ற குறிப்பான போதனையை பவுல் கொடுத்தார்.*

### "இருளின் அதிகாரத்தினின்று ஒளியினிடத்தில் திரும்புங்கள்" (4:17-19)

***[17]ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்கு சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்ற புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமலிருங்கள். [18]அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து, [19]உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காம விகாரத்துக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்.***

***வசனம் 17.*** *இப்பொழுது ஏறத்தாழ தனது கட்டளைகளை கொடுக்கப்போகிற நிலையில் பவுல், முக்கியமானதும், அவசரமானதும், அதி காரமுமான காரியங்களை பவுல் வலியுறுத்துகிறார்.* ***ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில்,*** *என்பது முன்பு 4:1 ல் சொன்ன புத்திமதியை சுட்டிக் காட்டுகிறது, அதில் பாத்திரராய் நடந்து கொள்வது பற்றியும், பவுல் தேவனுக்காகப் பேசினார் மற்றும் எழுதினார் என்பதைக் காட்டுகிறது. ஒரு நொடிப்பொழுது கூட அவர் தனது சொந்தக் கருத்தைப் போதிக்க நினைக்கவில்லை; தேவன் ஆவியானவர் மூலமாய் இந்த உபதேசங்களை வெளிப்படுத்தியதாக விசுவாசித்தார் (1 கொரிந்தியர் 2:10). "எச்சரிக்கிறதாவது" எனும் பதம் (*marturomai*), சாட்சியை முன்னிலைப்படுத்தி பேசுவதை உள்ளிட்டது; இந்த உபதேசங்களுக்கு பவுல் கர்த்தரை சாட்சியாக அழைக்கிறார். அவர் பேசுவதெல்லாம் "மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசுகிறோம்" என்று சொன்னார் (1 கொரிந்தியர் 2:13).*

*ஆவிக்குரியவர்கள் தனது எழுத்துக்கள் "கர்த்தருடைய கட்டளைகள்" என்று ஏற்றுக் கொள்வார்கள் என்றும் பவுல் சொன்னார் இதன் விளைவாக, பவுல் "நான் உங்களுக்கு எழுதினவைகள் கர்த்தருடைய கற்பனைகள் என்று ஒத்துக் கொள்ளக்கடவன்" என்று சொன்னார் (1 கொரிந்தியர் 14:37 ஐக் காண்க).*

*பவுல் இந்தக் கற்பனைகளை எபேசியர்களுக்குக் கொடுத்தார்:* ***"மற்ற புறஜாதிகள் நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமல் இருங்கள்,"*** *"நடக்கை"* (*peripateō*) *என்பது 2:2 லும் 4:1லும் பயன்படுத்தப்பட்ட வினைச்சொல்லே இங்கேயும் பயன்படுத்தப் பட்டுள்ளது. "புறஜாதிகள்" என்பது அவபக்தியாய் நடக்கிறவர்களைக் குறிக்கிறது, அல்லது அவர்களுடைய வாழ்வு முறையைக் குறிக்கிறது, இதற்கு முரண்பாடாக எபேசு கிறிஸ்தவர்களின் வாழ்வு இருக்க வேண்டும், கிறிஸ்துவுக்குள் இருக்கும் விசுவாசிகள் அவர்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராய் நடக்க வேண்டுமானால், அவர்களுடைய வாழ்க்கை முறை முற்றிலும் அவர்களுடைய சமுதாயத்திலிருந்து மாறுபட்டு இருக்க வேண்டும். புறஜாதிகள் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்தபோது, அவர்களும் தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். (அதிகாரம் 2 புறஜாதி களின் முந்தின வாழ்க்கையிலிருந்து அவர்கள் மனமாற்றப்பட்ட பின் வாழ வேண்டிய முறையின் எதிர்பார்ப்பை வித்தியாசமாய் நிறைவேற்றினார்கள்.) யூதர்களானாலும் புறஜாதி கிறிஸ்தவர்களானாலும் அழைப்புக்குப் பாத்திரராய் நடக்க, அவர்கள் தொடர்ந்து உற்சாகப்படுத்தப்பட பவுல் இந்த வசனப் பகுதி யில் கொடுத்திருப்பது போன்ற புத்திமதி தேவை. எபேசுவில் மூன்று வகையான மக்கள் இருந்தார்கள்: கிறிஸ்தவர்களல்லாத யூதர்கள், மனமாற்றப்படாத புறஜாதிகள் மற்றும் யூத புறஜாதிக்கிறிஸ்தவர்களாகிய "ஒரே புதிய மனுஷன்" என்று அறியப்பட்டவர்கள், இவர்கள் "ஒரே சரீரமாக" "சிலுவையினாலே தேவனுக்கு" ஒப்புரவாக்கப்பட்டவர்கள் (2:15, 16). 1 கொரிந்தியர் 10:32ல் இந்த மூன்று கூட்ட மக்களையும் குறிப்பிடும்போது பவுல் "யூதர்கள்" "கிரேக்கர்கள்" மற்றும் "தேவனுடைய சபை" என்று சொன்னார்.*

*('புறஜாதிகளின்')* ***வீணான சிந்தனை*** *என்பது மூன்று கருத்துக்களை உள்ளடக்கியது. (1) பவுல் தனது வாசகர்களின் முந்தின வாழ்க்கையில் இருந்த நிலைமைக்கும் கிறிஸ்துவுக்குள்ளான பிறகு இருந்த புதிய வாழ்வுக்குமிடையே யிருந்த வேறுபாட்டைச் சுட்டுக்காட்டினார். அவர் புற ஜாதிகளின் வாழ்க்கையில் பாராட்டுதலுக்கு ஏதுவான விஷயம் எதுவுமில்லை என்று சொன்னாரா? இல்லை, ஆனால் கிறிஸ்தவுக்குப் புறம்பேயான வாழ்க்கையிலிருக்கிற இருளின் பகுதியை விளக்கப்படுத்தினார். (2) இந்தக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் கண்டுகொண்ட புதிய வழியின் படியான வாழ்வை வாழ அறிவுறுத்தப்பட்டனர். அவர்களுடைய வாழ்க்கை முறையில் "முன்னும்" "இப்பொழுதும்" இருக்கிற முரண்பாடு எவ்வளவாய் பெரிய வித்தியாசத்தைக் கொண்டுள்ளதோ அந்த அளவுக்கு மிக அதிகமாக அவருடைய போதனை அவர்களுடைய சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. (3) அப்போஸ்தலன் முதலில் சிந்தனை செயல்முறையில் துவங்கி பிறகு செயல்களை நடைமுறைப்படுத்துவது குறித்துப் பேசினார் ஏனெனில் ஒரு நபர் முதலில் சிந்திக்கிறார் பிறகு அந்த சிந்தைகள் செயல்களுக்கு கொண்டு செல்கிறது.*

*"வீணான சிந்தை"* (*mataiotēs*) *என்பது வெறுமையை அல்லது*

குறிக்கோளற்ற நிலையைக் குறிப்பிடுகிறது. "அவர்களுடைய வீணாண சிந்தை" என்பது மதியீனமான எண்ணங்களையும் ஒழுக்கக்கேடான சிந்தைகளையும் மனதில் கொண்டிருப்பதை உட்படுத்தியது (காண்க ரோமர் 1:21, 28). புறஜாதிகள் அப்படிப்பட்ட சிந்தைனைக்கு ஒப்புக் கொடுத்திருந்தார்கள். "ஆதலால், தேவனிடத்தில் சரியான உறவுமுறை குறைவுபடுவதால், புறஜாதி களின் சிந்தனைகள் கேடான காரியத்திற்கு இடமளிக்கிறது." அது தன்னுடைய பிடியிழந்து விழுதலுக்கேதுவான கண்ணியாயிற்று.[1]

**வசனம் 18.** புறஜாதிகளின் வீணான சிந்தையைப் பற்றிய பவுலின் விளக்கம் தொடர்கிறது. **அவர்களுடைய புத்தியில் அந்தகாரப்பட்டு** என்பது அவர்களுடைய "வீணான சிந்தையைக் குறித்து" விளக்கமளிக்கிறது. புறஜாதி களின் மதியீனமான சிந்தைக்குக் காரணம் தேவனால் அளிக்கப்பட்ட வெளிச்சம் அடக்கி வைக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டிருப்பதே. விசுவாசியாத புற ஜாதிகளுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையேயான முரண்பாடு தெளிவாகக் காணப்படுகிறது: விசுவாசிகள் தேவனுடைய சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கும் "அவர்களுடைய மனக்கண்கள் ... பிரகாசமடையத்தக்க" நிலையிலும் இருந்தனர். புறஜாதிகளின் புரிந்து கொள்ளுதலில் பிடிவாதமான அந்தகாரக் கண்களைக் கொண்டிருந்தபடியால், **தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்தனர்,** அது சத்தியத்துக்கும் வெளிச்சத்துக்குமான மூலகாரணி. அவர்கள் தேவனிடத்திலிருந்து அந்நியர்களாக்கப்பட்ட படியால், அவர்களிடத்தில் ஆவிக்குரிய ஜீவியம் இருக்கவில்லை. அவர்கள் "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தார்கள்" (2:1) மேலும் அவர்களுடைய பாவத்தின் சம்பளமாக நித்திய மரணம் முன் குறிக்கப்பட்டது (ரோமர் 6:23). வெளிச்சத்தை அவர்கள் புறந்தள்ளிய செயல் தங்கள் ஜீவனையே புறந்தள்ளுவதாகும்.

புறஜாதிகள் **தங்களிலுள்ள அறியாமையினாலே** தேவனுடைய ஜீவனுக்கு அந்நியரானார்கள். அவர்களுடைய அறியாமை இயல்பில் சுயவிருப்பமுடையது ஏனெனில் தேவன் அவர்களுக்குக் கொடுத்த வெளிச்சத்தை அவர்கள் புறந்தள்ளினார்கள் (காண்க ரோமர் 1:18-23). புறஜாதிகள் **இருதயக் கடினத்தினால்** அவர்கள் அறியாமையுள்ளவர்களானார்கள். அவர்கள் தேவனை அறிந்துகொள்வதை தெரிவு செய்யாமல் மனப்பூர்வமாய் தேவன் அளித்த வெளிச்சத்தையும் ஜீவனையும் எதிர்த்து தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள். "கடினம்" என்பது (*pōrōsis* என்பதின்) மொழிபெயர்ப்பு, புதிய ஏற்பாட்டில் இது "உணர்ச்சியற்ற தன்மை, அல்லது கண்மூடித்தனம் என்பதை குறிக்கப்பயன்படுத்தின ஒரு உருவகச் சொல்."[2] வசனம் 18லும் வேறு இரண்டு இடங்களிலும் புதிய ஏற்பாட்டில் (மாற்கு 3:5; ரோமர் 11:25), அது "மன ரீதியான அல்லது ஒழுக்கரீதியான கடினத்திற்குப்" பயன்படுத்தப்பட்டுள்ளது.[3] "இருதயம்" என்பது *kardia,* என்பதன் மொழிபெயர்ப்பு, அதன் பொருள் "சரீர ஆவிக்குரிய மனரீதியான வாழ்விடம்."[4] ஒருவர் மனப்பூர்வமாய் தனது இருதயத்தை கடினப்படுத்தினால் அவர் தேவனைக் குறித்த அறிவில்லாமல், அறியாமையினால் ஆவிக்குரிய அந்தகாரத்தில் வாழ்கிறார்.

**வசனம் 19.** ரோமர் 1 ல் சொல்லப்பட்டுள்ளவர்களைப் போல, இங்கே விவரிக்கப்படும் ஜனங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வெளிச்சத்தை புறந்தள்ளியிருந்தார்கள்; அவர்களுடைய இருதயக் கடினத்தால், இன்னும்

*அதிகமாய் துன்மார்க்கத்தில் ஈடுபட்டனர்.* **அவர்கள்** *என்பது இதற்கு முன்பு குறிப்பிடப்பட்ட தனி நபர்களைக் குறிக்கிறது, அவர்கள் குறிப்பிடப்பட்ட இருதயக் கடினத்தின் விளைவிற்கு வேட்டையாடப்பட்ட விலங்காயினர்.* **உணர்வற்றவர்களாய்** *என்பது apēlgēkotes என்பதன் மொழிபெயர்ப்பு அதன் பொருள் "வலியையோ துக்கத்தையோ உணர்கிற தன்மை அற்றுப் போதல் ... ஆர்வமில்லாதிருத்தல்."*[5] *மனச்சாட்சியின் கடுக்கும் வேதனையை உணருவதற்கு அப்பால், இந்த புறஜாதிகள்* **தங்களை ஒப்புக் கொடுத்திருந்தார்கள்** *(paredōkan); அதாவது, பாவம் நிறைந்த வாழ்க்கைக்கு தங்களை முழுமையாய் அர்ப்பணித்திருந்தார்கள். வசனம் சொல்லுகிறது,* **சகல வித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களை காம விகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள்.** *இது ஏதோ புறஜாதிகளுக்கு இழைக்கப்பட்ட ஒரு காரியமல்ல மாறாக அவர்களாக செய்யும்படி தெரிந்து கொண்ட ஒரு காரியம்.*

*புறஜாதிகளின் இந்த தெரிவு மூன்று வார்த்தைகளில் விளக்கப்படுகிறது: "அசுத்தம்," "காம விகாரம்," மற்றும் "ஆவல்" (பேராசை). "காம விகாரம்" (aselgeia) என்றால் "தீவிரமான காமவேட்கை"; "அசுத்தம்" (akatharsia) என்பது ஒழுக்க ரீதியான அசுத்தத்தை விசாலமான பொருளில் குறிப்பிடுவது; மற்றும் "ஆவல்" (பேராசை) (pleonexia) என்பது "கட்டுப்படுத்தப்படாத பேராசை."*[6] *புறஜாதிகளின் தெரிவினால், அவர்களுடைய அவபக்தியினிமித்தம் தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார் (காண்க ரோமர் 1:24, 26, 28).*

## *பழைய மனுஷனை விட்டுத்திரும்பி புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுதல் (4:20-24)*

### *"பழைய மனுஷனைத் தரித்துப்போட்டு" (4:20-22)*

***[20]நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. [21]இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. [22]அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு.***

***வசனம் 20.*** *பவுல் அவர்களுடைய தற்போதைய வாழ்க்கையை அவர்களுடைய கடந்தகால வாழ்க்கையுடன் முரண்படுத்திக் காட்ட முற்பட்டார்.* **நீங்களோ இவ்விதமாய் கிறிஸ்துவை கற்றுக் கொள்ளவில்லை என்றார்.** NLT *மொழிபெயர்ப்பில் சொல்லப்படுகிறதாவது, "ஆனால் நீங்களோ கிறிஸ்துவை அறிந்து கொண்டபோது அப்படிப் போதிக்கப்பட வில்லை."*

*பவுல் இந்தப் பகுதியை 4:17ல், "நீங்கள் இனி நடவாமலிருங்கள்" என்பதுடன் துவங்கினார் (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). "நீங்களோ ... வில்லை" என்பது நேரடி மொழிபெயர்ப்பில், "ஆனால் நீங்கள் ... இல்லை" என்று சொல்லப்படுகிறது. "நீங்கள்" என்பது "புறஜாதிகளுடன்" முரண்பட்டிருப்பதை பவுலின் வார்த்தைகள் வலியுறுத்தலாக சொல்லப்படுகிறது (4:17). இதில்*

வரும் வினைச் சொல்லான "கற்றுக் கொள்ளல்" என்பது கடந்த காலத்தில் தொடர்ச்சியில்லாமல் ஒரே நிகழ்வில் நடந்த சம்பவமாகக் குறிப்பிடப்படுகிறது, இது எபேசியர்களின், மனமாற்றத்தைக் குறித்துப் பேசுகிறது என்பதில், சந்தேகமில்லை. "கிறிஸ்துவைக் கற்றுக் கொள்ளவில்லை" என்பது "கிறிஸ்துவை மட்டும் கற்றுக் கொள்ளவில்லை" என்ற நேரடி பொருள் கொடுக்கிறது. பிலிப்பியர் 3:10ல், பவுல் "அவரை [கிறிஸ்துவை] அறிகிறதற்கு," என்று சொன்னார், மேலும் கொலோசெயர் 2:6ல் "கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள்" என்றார், இந்த வசனப் பகுதியில் இன்னும் அதிகமான கருத்துக்கள் அடங்கியிருக்கிறது - எபேசியர் 4:17-32 - உட்பட கிறிஸ்துவைப் பற்றியோ அல்லது கிறிஸ்துவின் உபதேசத்தைப் பற்றியோ மாத்திரம் அறிந்து கொள்வது அல்ல. இந்த வசனங்களில் கிறிஸ்துவே நபர்த்துவ எழுவாயாக இருக்கிறார்; அவரே பிரசங்கிக்கப்படுகிற ஒருவர்; ஏற்றுக் கொள்ளப்படுகிற ஒருவர், அறியப்பட்டிருக்கிற ஒருவர், மற்றும் எபேசியர்கள் கற்றுக் கொண்டிருக்கிற ஒருவர்.

**வசனம் 21.** பவுல் தனது புத்திமதியை விளக்கப்படுத்துகிறார்: **இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே.** (போதிக்கப்பட்ட) "படியே" என்பது கிரேக்க மொழியில் இரண்டு சிறிய வார்த்தைகளைக் கொண்டது, (*ei*, "*if*") மற்றும் (*ge*, "படி," "அதில் பார்க்கிறபடி"). ஒன்றிணைந்த, வார்த்தைகள் கூறும் கருத்து "விசுவாசிக்கிற ஒரு காரியம் சரியானது என்று ஏற்றுக் கொள்வது."[7] பவுல் தான் சொல்லப்போகிற விஷயத்தில் கேள்வியோ சந்தேகமோ கொண்டிருக்கவில்லை, ஆனால் உறுதியான நம்பிக்கையையும் சரியான ஏற்றுக் கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிறார்.

"நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து" என்று பவுல் சொல்வதால், எபேசியர்கள் ஆரம்பக் கட்டத்தில் சுவிசேஷத்தைக் கேட்டதை குறிப்பிடுகிறார் (காண்க 1:13). அவர்கள் "அவரிடத்தில் கேட்டார்கள்" என்பது அவரது செய்தியை அப்போஸ்தலனாகிய பவுல் சத்திய வசனத்தை அறிவித்த தன்மூலம் கேட்டார்கள் (காண்க கொலோசெயர் 1:5; நடபடிகள் 19:1-10).

> கிறிஸ்துவினிடத்தில் கேட்பதைப் பொறுத்தவரை, கிரேக்க வசனப்பகுதியில் கிறிஸ்துவுக்குச் சொல்லப்படும் பிரதிபெயர்சொல் "கேட்க" என்று இரண்டாம் வேற்றுமையில் உள்ளது. இந்த [வார்த்தையுடன்], ஒருவருடைய வார்த்தையைக் கேட்கும் ஒரு நபர் ஆறாம் வேற்றுமைக்கு உரியவராக, ஒருவருக்கு செவிகொடுப்பவர் குற்றப்படுத்தப்படுபவராக நிற்கிறார் ... ஆக கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்படுதல் என்பது கிறிஸ்துவைக்குறித்து அறிவிக்கப்படும் காரியங்களைப் பெற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கிறார்.[8]

எபேசியர்கள் கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய வழியைக் குறித்தும் கேட்டிருந்தார்கள் (4:20). இந்த ஆரம்பப் போதனையைத் தொடர்ந்து, அவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். "அவரால் போதிக்கப்பட்டீர்களே" என்பது அவர்கள் பெற்றுக் கொண்ட போதனையைக் குறிப்பிடுகிறது, இது சுவிசேஷத்தை கேள்விப்பட்ட துவக்கநிலைக்குப்*பின்* அவர்கள் கிறிஸ்தவர்களாக்கப்பட்டதைத் தொடர்ந்து கேள்விப்படுவதைக்

குறிக்கும். அவர்கள் மேற்கொண்டு "அவருக்குள்" மனமாற்றம் பெற்றபின், "அவருக்குள்" ஆவிக்குரிய வளர்ச்சியை அடையும் பொருட்டு கேட்டல்.

"இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே" என்பது இயேசுவே சத்தியமாக இருக்கிறார் என்பதை நினைப்பூட்டுதலாகக் குறிப்பிட்டார் (காண்க யோவான் 14:6). இயேசுவைப்பற்றி சத்தியத்தைக் கேட்ட எபேசியர்கள் அவர்களுக்குப் போதிக்கப்பட்ட சத்தியத்தை ஏற்றுக் கொண்டு "அவருக்குள்" புறஜாதிகளைப் போல் வாழாமல் கிறிஸ்துவுக்குள் அவர்கள் பெற்ற புதிய வாழ்வை வாழும்படி போதிக்கப்பட்டனர்.

***வசனம் 22.*** வசனங்கள் 22 லிருந்து 24 வரை மூன்று செய்கைகள் குறிப்பிடப் பட்டுள்ளது. எபேசியர் என்ன செய்யும்படி (4:21) போதிக்கப்பட்டார்களோ அவைகளை அப்போஸ்தலன் விளக்கப்படுத்துகிறாரா? அல்லது இந்தச் செயல்கள் சகோதரர்கள் போதிக்கப்பட்டிருந்ததன் விளைவுகளா? அவைகள் முக்கிய மற்றவைகளாக ஒருவேளை இருக்கலாம், ஏனெனில் பவுல் சொன்னார், "நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து," "அவரால் போதிக்கப்பட்டீர்களே," "பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு." போதிக்கப்பட்டவை களைக் குறித்து பவுல் விளக்கம் அளிக்கிறார், அதன் விளைவு சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிதல். என்பதாகக் காணப்படுகிறது. இன்னொரு வார்த்தையில் சொன்னால், அவர்கள் கேட்டிருந்தார்கள், போதிக்கப்பட்டிருந்தார்கள், அவர்கள் கிறிஸ்தவர்களானபோது "பழைய மனுஷனை" களைந்து போட்டதன் மூலமாக போதிக்கப்பட்ட போதனைக்கு பதில் செயல் செய்தனர்.

முதலாவது செய்கை **பழைய மனுஷனை களைந்து போடுதல்.** இந்த செய்கை எப்பொழுது நிறைவேறியது என்று சரியான குறிப்பை வசனம் கொடுக்க வில்லை; ஆகிலும் ரோமர் 6:2-6 கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவரோடேகூட அடக்கமும் பண்ணப்பட்டார்கள் என்று கூறுகிறது. இவ்வகையில், ஒரு நபர் பாவத்துக்காக மரித்து புதிய ஜீவனுள்ளவராய் எழுப்பப்படுகிறார். மரித்து கிறிஸ்துவுடனே கூட எழுந்தவர்களைக் குறித்து, வசனம் 6 ல் பவுல் சொன்னார், "நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்." என்று சொன்னார். "பழைய மனுஷன் ... புதிய மனுஷன்" என்ற கருத்து (4:20-24) இந்த வசனப்பகுதியில் குறிப்பிடுவது போலவே ரோமர் 6 லும் எழுதும் போது அது பவுலுடைய மனதில் இருந்துள்ளது. மேலும், பவுல் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனை பேரும் "கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று உறுதிப்படுத்தினார் (கலாத்தியர் 3:27), இந்த உண்மை "புதிய மனுஷனுக்கு" குறிப்பிட்டுச் சொல்கிறது. ஆகையால், 4:22ல் இந்த செய்கைக்கு ஒரு நேரம் விவரிக்கப்படுகிறது - *ஞானஸ் நானத்தின் போதுதான்* இந்த பழைய மனுஷனை களைந்து போடும் செயல் சம்பவிக்கிறது.

"பழைய மனுஷனைப்" பொறுத்த மட்டில், "பழைய" (*palaios*) என்பது "தேய்ந்து போன," "முதுமையினால் பலவீனப்பட்ட, பயனற்ற"[9] "மனுஷன்" (*anthrōpos*) என அர்த்தப்படுகிறது. இந்த வசனம் எபேசியர்கள் இரட்சிக்கப்படாதபோது மற்றும் பாவத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த

போது இருந்த நிலையை படம் பிடித்துக் காட்டுகிறது. "பழைய மனுஷனை" களைந்து போட்டு என்பது ஏதோ சில தீய ஒழுக்கங்களை சுலபமாக களைந்து போடுதலல்ல. ஆனால் கடந்த காலத்துடன் ஒரு தீர்மானிக்கப்பட்ட துண்டித்தல் ஆகும். களைந்து போடுதல் என்பது "பாவத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த முழு பழைய மனுஷனையும் விலக்கிப்போடுதல் என்பதாக இருந்தது."[10]

பழைய மனுஷன் **மோசம் போக்கும் இச்சைகளினாலே கெட்டுப்போகிறவனாயிருந்தான்.** "கெட்டுப்போகிற," என்பது நிகழ்கால எச்சவினையில் சொல்லப்படுகிறது, அதன் பொருள் பழைய மனுஷன் மேலும் மேலும் மோசம் போகத்தக்க ஒரு தொடர் செயல் முறையாக இருக்கிறது. "இச்சை" என்று சொல்லப்படுவது *epithumia* எனும் வார்த்தையின் மொழிபெயர்ப்பு, அதன் பொருள் இந்த வசனப் பகுதியில் "ஒரு ஏக்கத்தை அல்லது கட்டுக்கடங்கா உணர்ச்சியைக் கொண்ட ஆசையைக்" குறிப்பிடுகிறது.[11] இந்த தீமையான ஆசைகளெல்லாம் "மோசம் போக்குபவை," அதாவது அவைகள் ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையை வாக்குத்தத்தம் பண்ணி கெட்டுப் போன வாழ்க்கைக்கு இட்டுச் சென்றது. மோசம் போக்குதல் புறஜாதிகளின் குணாதிசயம் (2:3). விசுவாசிகள் இந்த வாழ்க்கை முறையைவிட்டு விட்டவர்கள், அது சுவிசேஷத்தின் சத்தியத்துக்கு எதிராக நின்றவை (4:14, 15; 2 தெசலோனிக்கேயர் 2:10). சத்தியத்திற்கும் சத்தியமல்லாததற்கும் இடையே வித்தியாசப்படுத்தி பார்க்கத் தெரியாதவர்களை ஒரு பொய்யான வாழ்க்கைத் தத்துவம் கண்ணியில் அகப்படுத்துகிறது (காண்க கொலோசெயர் 2:8).

### "புதிதான ஆவியுள்ளவர்களாகுதல்" (4:23)

**[23]உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி,**

**வசனம் 23.** மூன்று செய்கைகளில், முதலாவதான "களைந்து போடுதல்," என்பது எபேசியர்கள் ஞானஸ்நானம் பெறும்போது கடந்தகாலத்தில் செய்யப்பட்ட ஒன்றாக இருந்தது. இரண்டாவது செய்கை செயல்முறை, **உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகுங்கள்** "புதிதான ஆவியுள்ளர்களாவது" (*ananeoō*) "உள்ளான தகவலில் புதுமைபடைத்தல்"[12] என்று பொருள், இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கண வார்த்தை "எப்பொழுது குறிப்பிட்ட செயல் இடம் பெறும் என்று குறிப்பாய்ச் சொல்லாமல் தொடர் … செயலாகக் குறிப்பிடுவது" மேலும் "எழுவாய் (சம்பந்தப்பட்ட நபர்) எப்படியோ தன்னையோ அல்லது தன்னைக் குறித்தோ செயல்படுவதை இது காட்டுகிறது."[13] பழைய மனுஷனை களைந்து போடுதலாகிய செயல் ஒரே தடவையில் செய்து முடிக்கும் நிகழ்ச்சி அது ஞானஸ்நான நேரத்தில் சம்பவித்தது, புதிதான ஆவியுள்ளவர்களாகுதலாகிய நிகழ்ச்சி கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் நடக்க வேண்டிய ஒன்று.

"ஆவி" என்று இங்கே குறிப்பிடப்படுவது பரிசுத்த ஆவியை அல்ல, ஏனெனில் பவுல் "*உங்கள்* உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாகுதலைக்" குறிப்பிடுகிறார் (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). "உள்ளம்" (மனம்) என்பது மனிதனுடைய புத்திக்கூர்மையின் கொள்ளளவு "ஒழுக்க சம்பந்தப்பட்ட சிந்தனையை" "பகுத்துப் பார்க்கவும் புரிந்து கொள்ளவும் கூடிய ஒரு பகுதி"[14]

*(காண்க 4:17 மற்றும் ரோமர் 1:28; 7:23). "ஆவி" என்பது "மனம்" என்பதுடன் இணைக்கப்பட்டதாய் குறிப்பிடப்பட்டிருக்கிறது, ஆனால் இரண்டும் வெவ்வேறு தான். ஒரு தனி நபரின் சுயவியல்பு தேவனுடைய ஐக்கியத்தை அனுபவிக்கிறது மற்றும் அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிறான் (காண்க ஆதியாகமம் 1:26, 27). 1 கொரிந்தியர் 14:14ல் ஆவிக்கும் "மனதுக்கும்" (உள்ளத்துக்கும்) உள்ள வித்தியாசத்தை பவுல் விவரிக்கிறார். இதன் பொருள் தனித்தன்மை (ஆவி) மற்றும் முறையாக பகுத்து ஆராய்கிற திறமை (உள்ளம்) நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டும் வரவேண்டும் (காண்க ரோமர் 12:2; 2 கொரிந்தியர் 4:16). இங்கே பயன்படுத்தப்படுகிற வினைச் சொல் கிறிஸ்தவன் தனது செய்கையால் தன்னைத்தான் புதுப்பித்துக்கொள்ள பிரயாசப்படுகிறான் என்பதை இந்த வாக்கியம் நமக்கு ஆலோசனை சொல்லுகிறது.*

***"புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" (4:24)***

***[24]மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.***

***வசனம் 24.*** *பவுல் பெயரிட்ட மூன்றாவது செய்கை இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிற* ***புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்*** *என்பது பழைய மனுஷனைக் களைந்து போடுதலைப் போலவே, இந்தச் செயல் ஒரு குறிப்பிடப்படாத நேரத்தில் இடம் பெறுகிற ஒரு சம்பவமாகும். களைந்து போடுதல் என்பது ஞானஸ்நானத்தின் போது நடந்தது, மற்றும் அதிலேயே புதிய மனுஷனைத் தரித்துக் கொள்வதும் நடந்தது. ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது, அவர் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார் மற்றும் "புதிய சிருஷ்டியாகவும்" ஆகிறார் (2 கொரிந்தியர் 5:17). கிறிஸ்துவுக்குள் இருப்பதால், பிறகு அவர் அவருடைய சரீரத்திற்குள் இருக்கிறார், அதாவது சபைக்குள், மற்றும் தேவனுடைய வீட்டாராகிய அவர் குடும்பத்தில் ஒரு அங்கமாகவும் இருக்கிறார் (காண்க 2:19).*

*தேவனுடைய பிள்ளையாக, கிறிஸ்தவன் தானே குடும்பத்தின் சாயலைத் தரித்துக் கொள்ள வேண்டும். ஆகையால், பவுல் இந்த புதிய மனுஷன் தேவனுடைய சாயலாயிருக்கிறவன் என்று சொன்னார். புதிய மனுஷன் என்பது நேரத்துக்குரிய புதிய தன்மையல்ல (பவுல் இதை neos என்ற வார்த்தையில் பயன்படுத்தியிருக்க வேண்டும்), மாறாக இது தகுதி அடிப்படையில் புதிய மனுஷன் (kainos என்ற வார்த்தையை) பயன்படுத்திப் பேசினார். இந்தப் புதிய தன்மை "பழைய தன்மைக்கு எதிரானது" அதாவது "காலங்களினூடே அழிவுற்றுப் போவது."[15] இந்த நிருபத்தின் பின்பகுதியில், இந்தக் கருத்தை பவுல் "நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்" என்ற வார்த்தைகளில் சொன்னார் (5:1). இதன் செயல்முறை ஒரு சிருஷ்டிப்பு. தேவன் முதல் மனுஷனை பூமியின் மண்ணினாலே சிருஷ்டித்து மாமிசப் பிரகாரமான சுவாசத்தை அவனுக்குக் கொடுத்தார், அவர் புதிய சிருஷ்டியை விழுந்து போன மனுஷனிலிருந்து உருவாக்கி தன்னைப் போன்ற சாயலை அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவனைக் கொடுத்தார். நாம் ஏற்கனவே சிருஷ்டிப்பைப் குறித்த கருத்தை ஆராய்ந்தோம்,*

அதாவது பவுல் விசுவாசிகள் "நற்கிரியைகளைச் செய்யும்படிக்கு கிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டார்கள்" என்று சொல்லியிருந்ததை ஆராய்ந்தோம் (2:10). இந்த விஷயத்தில் தேவனுக்கும் மனுஷனுக்குமிடையே இருந்த ஒத்துழைப்பைக் காணக்கூடும், இதில் தேவனே முதலில் துவங்கிவைக்கிறார் (2:1-22). சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டவர்களாக ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவைத் தரித்து கொண்டு, புதிய மனுஷனைத் தரித்துக் கொள்கிற பொறுப்பை நாம் நிறைவேற்ற வேண்டும் (கலாத்தியர் 3:27).

*நீதியிலும்* என்பது கிறிஸ்தவர்களாக மாறும் ஜனங்களின் கொடுக்கப்பட்ட தகுதியாம்ஸம். மனிதனுக்கென்று தன்னில்தானே நீதி எதுவுமில்லை; அவன் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில், "நீதிக்கு நீங்கலாயிருந்தான்" (ரோமர் 6:20). மனிதனுடைய நீதியாய் மாறும்படிக்கு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் (1 கொரிந்தியர் 1:30). தேவன் "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21). ஆகையால், ஒரு நபர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிற போது, அவர் நீதிக்கு அடிமையாகிறார் (ரோமர் 6:17, 18). கிறிஸ்துவுக்குள் இருந்தவர்களை நீதிமான்களாக தேவன் அறிவித்தார்; புதிய மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டதின் நோக்கமும் அதுவே. இந்த நீதி மற்றவர்களோடு நமக்கு உள்ள உறவுமுறையில் எது சரியானவைகளோ அவைகளைச் செய்யும் போது தானாகவே (நீதி) சாட்சியிடுகிறது.

**பரிசுத்தமும்** கூட தேவனுடைய - சாயலில் இருக்கிற காரியத்தை ஆலோசனையாகச் சொல்லுகிறது, தேவன் பரிசுத்தராயிருக்கிறது போல எபேசியரும் பரிசுத்தராய் இருக்க வேண்டியவர்களாயிருந்தார்கள் (காண்க 1 பேதுரு 1:16). கூடுதலாக, நீதி என்பது தேவனுடைய தகுதியாம்ஸமாயிருப்பது போல, விசுவாசிகள் தங்களுடைய மனுஷீக உறவு முறையில் அவரைப் பின்பற்றுகிறவர்களாக, இருக்க வேண்டும், நீதி என்பது தேவனைப் போல் இருப்பதும் அவருக்கு உகந்ததைக் கொடுப்பதும்தான். புதிய மனுஷன் தனக்கு மற்றவர்களோடு இருக்கிற உறவுமுறையிலும் தேவனோடு இருக்கிற உறவுமுறையிலுமான இரு பொறுப்புக்களையும் நிறைவேற்றுகிறான். அதுவே மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் இருத்தல்; அதாவது, தேவனுடைய வெளிப்பாட்டின் சத்தியம் புறஜாதிகளின் தகுதியாம்ஸங்களைப் போதித்து பரிசுத்தமற்றதும் நீதியற்றதுமான அவர்களுடைய வாழ்க்கை முறைகளையும் எதிர்க்கிறது (4:17-19).

## "தவறானதிலிருந்து சத்தியத்துக்குத் திரும்புங்கள்" (4:25)

**[25]அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக் கடவன்.**

ஒரு கிறிஸ்தவனாக நடந்து கொள்வதோ, அல்லது வாழ்வதோ கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கமாக இருந்து முறையாக செயல்புரியும் போது, அவரது தனிப்பட்ட அபிவிருத்தியிலும் கூட அவசியமாகிறது. பவுல் இதை மனதில்

*புதிதாக வேண்டும் என்றார். 4:25-32 ல், அவர் குறிப்பான விளக்கத்தைக் கொடுத்து கிறிஸ்துவினிடத்தில் வருகிற ஒருவர் எப்படி இருளிலிருந்து வெளிச்சத்துக்கும், பழைய மனுஷனிலிருந்து புதுசிருஷ்டிக்கும் மாறமுடியும் என்பதைக் குறிப்பிடுகிறார்.*

***வசனம் 25.*** *இங்கே கொடுக்கப்படுகிற அறிவுரை உறுதியற்ற ஒரு மேற்கோளாகிய சகரியா 8:16 லிருந்து கொடுக்கப்பட்டது. இந்த வாக்கியம் ஒரு நடைமுறையில் கைக்கொள்ளுதலில் புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுதல் என்பதன் பொருள் என்ன, தேவனைப் பின்பற்றுதல் மற்றும் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரராய் நடப்பது என்றால் என்ன என்பதை ஆரம்பித்து பேசுகிறது.* ***அன்றியும்*** *என்பது பவுல் இப்பொழுது எழுதியிருப்பவைகளோடு அடுத்து சொல்லப்போகிறவைகளை இணைக்கும்படி சொல்லப்பட்டவார்த்தை. கிறிஸ்தவர்களாகிய நாம், மற்றவர்களிடத்தில் உண்மையையே பேச வேண்டும் - நாம் தேவனுக்கு உரியவர்கள் என்பதினாலே மாத்திரமல்ல, ஆனால் நாம்* ***ஒருவருக்கொருவர் அவையவங்களாயிருக்கிறபடியாலும் தான்.*** *இந்த நிருபம் முழுவதும், சபை என்பது கிறிஸ்துவை தலையாகக் கொண்டு அமைந்துள்ள கிறிஸ்துவின் சரீரம் என்று பவுல் காட்டினார். மாமிச சரீரத்தில் இருக்கிற அவயவங்களைப் போலவே, ஆவிக்குரிய சரீரத்தில் இருக்கிற அங்கத் தினர்களும், தலையின் சித்தத்தை நிறைவேற்றி ஒருவருக்கொருவர் ஊழியம் செய்கிறவர்களாயிருப்போமானால், ஒரு சரீர இயக்கத்துக்கு ஒப்பாக,* ***உண்மை யையே பேச*** *[பேசிக் கொண்டிருக்க] வேண்டும். “பொய்” என்ற கிரேக்க பெயர்ச்சொல் (pseudos), எல்லா வித பொய்களையும் பொய் கூறுதலை “ஒரு முக்கிய நிகழ்வாக”[16] சுட்டிக் காட்டுகிறது, பொய்களைக்களைந்து என்பதற்கான கிரேக்க வார்த்தைகள் ஒரேதடவையாக பழைய மனுஷனைக் களைந்து போட்டு விடுவது போலவே, பொய்யும் ஒரே தடவையாக களைந்து போடப்படவேண்டும் என சுட்டிக் காட்டுகின்றன.[17] இதில் அனைத்து விதமான வஞ்சகங்களும், பாதி உண்மையைச் சொல்லி வஞ்சிக்கிற (கபட) ஆசை, முழு உண்மையை அறியத் தேவைப்படும் விஷயங்களெல்லாம் மறைக்கப்படுதல் ஆகியவை உட்பட்டவை. இந்த சொற்றொடருடன், புதிய மனுஷனுக்குத் தேவையான குறிப்பிடத்தக்க ஒழுக்க நடத்தைகளை, உண்மையைப் பேச வேண்டும் என்பதில் துவங்கி, பவுல் அறிமுகப்படுத்துகிறார். வேறு விதமாய் செய்யப்படுவது என்பது நம்முடைய சகோதர சகோதரிகளை தவறாக நடத்துவதும் பழைய மனுஷனுக்கே திரும்புவதுமாகும்.*

## *“கோபத்தைக் கட்டுப்படுத்தத் திரும்புங்கள்” (4:26, 27)*

***[26]நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது. [27]பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்.***

***வசனம் 26.*** *பவுல் பழைய ஏற்பாட்டின் உறுதியற்ற வசனப் பகுதி, சங்கீதம் 4:4 ஐ மேற்கோளாக பயன்படுத்தி, தனது கருத்தைச் சொன்னார்: நீங்கள் கோபங்* ***கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்.*** *இங்கே பவுல்*

*“கோபங்கொள்ள” அனுமதியளிக்கவில்லை, மாறாக கோபம் கொள்வது இயல்பானது என்று தான் உணர்ந்து கொண்டிருப்பதைக் குறிப்பிடுகிறார். வசனங்கள் 26, 27 ல் சொல்லப்படும் அறிவுரைகள் கோபத்தில் வரும் ஆபத்தைக் காட்டுகின்றன. வசனம் 26 லும் 31லும் பவுல் “கோபத்தை” பயன்படுத்திப் பேசுகிறார் - (4:26; orgizō) மற்றும் (4:31; orgē). வசனப்பகுதியின் உட்கருத்திலிருந்து, orgizō என்பது கட்டுப்பாட்டுக்குள் இருக்கிற கடுங்கோபம் என்றும் orgē என்பதோ முற்றிலும் வெளிக்கொணருகிற கோபம் அல்லது பகைமை, கட்டுப்படுத்தக் கூடாமல் போகக்கூடியது என்றும் தெரிகிறது. நீதியுள்ள கோபாக்கினையும் உண்டு. தேவன் தமது கோபாக்கினையை orgē எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் எதிராக செலுத்துகிறார் (ரோமர் 1:18). கிறிஸ்துவின் நிறைவான தெய்வீக சாட்சியங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அவரை விசுவாசிக்க விருப்பமில்லாதிருந்த சிலர் மீது அவர் தமது கோபத்தைக் (orgē) காட்டினார் (மாற்கு 3:5), ஆகிலும் அவர் கோபப்பட்டதில் காரணமிருந்தது, அதை நீதியான முறையில் வெளிப்படுத்தினார்.*

*எல்லா கோபங்களும் தவறானவையல்ல, ஆகிலும் கோபங்கொள்ளுதல் ஆபத்தானதும் கூட. நாம் கோபமாயிருக்கிற வேளையில், பாவமுள்ள காரியங்களைச் செய்யவோ சொல்லவோ கூடும். பவுல் “கோபங் கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள் என்று சொன்னார்.” கூடுதலாக, பாவம் ஒருவருக்குள் நிலை கொண்டிராமல் விலக்க பவுல்,* ***சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக் கடவது*** *என்று சொன்னார். இந்தச் சொற்றொடரில் “கோபத்துக்கு” வேறு ஒரு வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (parorgismos). அது பவுல் ஏற்கனவே சொன்னதை மறு வலியுறுத்தலாகச் சொல்லப்படுகிறது, அது “செய்யப்படு வினையாக பலமாக சொல்லப்பட்டாலும் கிளறிவிட்ட ஒரு கோபத்தை அது குறிப்பிடுகிறது.”[18] கோபம் நம்முடைய வாழ்க்கையிலும் பற்றி எரிவது போல் வரக் கூடும், ஆனாலும் கோபத்திலே நாம் என்ன சொல்லுகிறோம் அல்லது என்ன செய்கிறோம் என்பது குறித்து கவனமாயிருக்க வேண்டும் - அப்பொழுதுதான் கோபத்தை மேற்கொள்ள வேண்டும்.*

***வசனம் 27. பிசாசுக்கு இடங்கொடாமல் என்பது ஏற்கனவே தொடர்கிற*** *ஒரு செயல் தடை செய்யப்படுகிறது. பவுல் சொல்வதெல்லாம், “பிசாசுக்கு ஒரு நிகழ்ச்சிக்கு (அல்லது சந்தர்ப்பத்துக்கு) இடங்கொடுத்து செயல்பட இடங்கொடுக்க வேண்டாமே.”[19] நமது வாழ்க்கையிலே தவறான கோபத்துக்கு கொடுக்கப்படும் சந்தர்ப்பம் பிசாசு நுழைந்து பாவத்துக்கு கொண்டு செல்வதாகிவிடும். பவுல் “பிசாசை” சாத்தானாக உணர்ந்து கொண்டிருந்தார் (வெளிப்படுத்தின விசேஷம் 12:9), அவனை ஒரு உண்மையான ஆவிக்குரிய சக்தியாக அறிந்திருந்தார். 2:2ல் பெயர் குறிப்பிடப்பட விட்டாலும், அங்கே குறிப்பிடப்படுவது பிசாசைப் பற்றித் தான். “கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவி ...” இந்நிருபத்தின் பின் பகுதியில், பவுல் “பிசாசின் தந்திரங்களைக் குறித்தும்” “பொல்லாங்கன் எய்கிற அக்கினியாஸ்திரங்களைக் குறித்தும்” பேசினார், அதுவே கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய முறையில் எதிர்த்துப் போராடுகிற பொல்லாத ஆவிகள் (6:10-16). கட்டுக்கடங்காத கோபம் சாத்தானுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்து, உள்ளத்திலே புதிதான ஆவியைப் பெற்றுள்ள புதிதான மனுஷனுக்கு எதிராக, அவன் தான்*

*அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடப்பதை எதிர்த்து கிரியை செய்வான்.*

## *“திருடுவதிலிருந்து திரும்பி வேலை செய்ய வேண்டும்” (4:28)*

***[28]திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத் தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்.***

*__வசனம் 28.__ அடுத்து பவுல் திருடுதலைப் பற்றி பேசுகிறார்: __திருடுகிறவன் இனித்திருடாமல்.__ நியாயப்பிரமாணமும் திருடுவதற்கு தடைசெய்தது (யாத்திராகமம் 20:15; லேவியராகமம் 19:11; உபாகமம் 5:19), அந்தத் தடை புதிய ஏற்பாட்டிலும் தொடர்ந்து குறிப்பிடப்பட்டது (மாற்கு 10:19; ரோமர் 13:9). இந்தப் பிரமாணத்தின் மீதான வலியுறுத்தல் எபேசுவில் தேவைப் பட்டிருக்கக் கூடும், அங்கே திருடுதல் ஒரு வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்தக் கிறிஸ்தவர்கள் ஒரு காலத்தில் திருடர்களாக இருக்கவில்லை, ஆகிலும் சிலர் இன்னும் திருடிக்கொண்டிருந்தார்கள். இங்கே சொல்லப்பட்டுள்ள வினைச்சொல் ஒரு தொடர் செயலாக அல்லது மீண்டும் மீண்டும் செய்யக் கூடியவர்களாக குறிப்பிடுகிறது.[20] பவுல், “திருடுவதை நிறுத்துங்கள்!” என்று சொன்னார்.*

*திருடுவதற்குப் பதிலாக செய்ய வேண்டிய காரியம் கடினமாக வேலை செய்தல் - __கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக் கடவன்.__ ஆதாமின் வீழ்ச்சிக்கு முன் ஏதேன் தோட்டத்தில் வைக்கப்பட்ட போது வேலை செய்யும்படி பணிக்கப்பட்டு, தோட்டத்தைப் “பண்படுத்தவும் காக்கவும்” வைக்கப்பட்டான் (ஆதியாகமம் 2:15). ஆதாமின் வீழ்ச்சிக்குப் பிறகும், அவனுக்குக் கொடுக்கப்பட்ட பணி அதிக கஷ்டமுள்ளதாக இருந்தபோதிலும், தொடர்ந்து வேலை செய்ய வேண்டியவனாக இருந்தான் (ஆதியாகமம் 3:17-19). வேலை செய்வது நியாயப்பிரமாணத்தில் பத்துக் கட்டளைகளில் ஒரு பகுதியாக இருந்தது, தேவன் சொன்னார், “ஆறுநாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக” (யாத்திராகமம் 20:9). புதிய ஏற்பாட்டில் இந்தப் பிரமாணம் அங்கீகரிக்கப்பட்டதாயிருந்தது, மேலும் இயேசு ஓய்வு நாளை மீறினார் என்பதாக “ஏழாம் நாளில் வேலை செய்ததனிமித்தம் குற்றஞ் சுமத்தப்பட்டார்” (காண்க மாற்கு 2:23-28; 3:1-6). பவுல் கூடாரத் தொழிலை தனது சொந்தக் கைகளால் செய்து தனக்குத்தானே தேவைகளை பெரும்பாலும் பூர்த்தி செய்து கொண்டார் (நடபடிகள் 18:3). தான் வேலை செய்ததோடல்லாமல் கட்டளையிட்டுச் சொன்னது, என்னவெனில், “ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது” (2 தெசலோனிக்கேயர் 3:10; காண்க 1 கொரிந்தியர் 4:12; 1 தெசலோனிக்கேயர் 4:11, 12).*

*வேலை செய்தலைக் குறித்து பவுலின் செயலூக்கம் இருவகைப்பட்டது. (1) வேலை பயனள்ளது. ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் ஆக்கப்பூர்வமான வேலைசெய்வாரானால் தன்னுடைய தேவைகளை அவரே நிறைவேற்றிக்*

கொள்கிறார். வேலை செய்வது ஒரு சமுதாயத்துக்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதால் வேலை மதிப்பிற்குரியது. ஜனங்கள் வேலையில் மும்மரமாய் ஈடுபட்டுக் கொண்டிருப்பதும் உற்பத்திகளைப் பெருக்குவதும் அவர்களுக்கே மகிழ்வைக் கொடுக்க வல்லது. வேலைசெய்யும் ஜனங்கள் மதிக்கப்படத் தக்கவர்கள். (2) வேலை செய்வது குலைச்சலுள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்ள உதவுகிறது. முதல் நூற்றாண்டு சபையிலே இது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. உதாரணமாக, அங்கத்தினர்களாக இருந்த எருசலேம் சபையார் அவர்களுக்குள் குறைச்சல் உள்ளவர்கள் இராதபடிக்கு ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டார்கள் (நடபடிகள் 2:45; 4:34). யூதேயாவில் பஞ்சம் உண்டானபோது, ஐரோப்பா மற்றும் ஆசியமுனையிலிருந்த ஜனங்கள் அவர்களுடைய தேவையுடைய சகோதரர்களுக்கு நிவாரணப்பொருட்களை அனுப்பினார்கள் (நடபடிகள் 11:29, 30; ரோமர் 15:26; 2 கொரிந்தியர் 8; 9). "பரிசுத்தவான்களுடைய குறைவிலே அவர்களுக்கு உதவி" செய்யும்படி ரோமர்களுக்கு பவுல் அறிவுறுத்தினார் (ரோமர் 12:13).

> ஒரு ஒழுக்கம் பற்றிய வாக்கியத்தை முழுமையாய் (4:8) எடுத்துக் கொள்ளும்போது. அது பழைய மனுஷனை தரித்து போடுகிற காரியம் உட்படுத்தப்பட்ட மாற்றம் அதிதீமான முறையில் அழகாக விளக்கப்படுத்தப்படுகிறது. மற்றும் புதிய மனுஷனைத்தரித்துக் கொள்ள செய்கிறது. திருடுகிறவன் இப்போது ஜனங்களுக்கு நன்மை செய்கிறவனாக மாறி, சட்டத்துக்குப் புறம்பேயான பழைய வழிக்குப் பதில் தாராளமாகக் கொடுக்கிற புதிய வழி அந்த இடத்தை எடுத்துக் கொள்கிறது.[21]

## "கெட்டவார்த்தைகளை விட்டு பக்தி விருத்திக் கேதுவானவைகளைப் பேசுங்கள்" (4:29)

**[29]கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்லவார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள்.**

**வசனம் 29.** கிறிஸ்தவனுடைய பேச்சுநடையிலும் புதிய மனுஷனுக்குரிய தன்மை விளங்கப் பண்ணப்பட வேண்டும். தவறான வார்த்தைகள் சரீரத்தின் ஐக்கியத்தை குலைத்துப்போட்டு விடக் கூடும் மற்றும் பாத்திரராய் நடந்து கொள்ளுகிறதைக் குறித்து பவுல் ஏற்கனவே இந்த அதிகாரத்தில் பேசியிருக்கிற அந்த நடத்தையும் சீர்குலையும். இதற்கு முன்பு கொடுக்கப்பட்ட புத்திமதியில், செயலூக்கங்களைத் தொடர்ந்து பவுல் இரண்டு வாக்கியங்களைச் சொன்னார். வசனம் 29 அதே மாதிரியைப் பின்பற்றுகிறது, கெட்டவார்த்தைகளை தடை செய்து, நல்வார்த்தைகளைப் பேச ஊக்கம் அளிக்கிறார். கிறிஸ்தவர்கள் பத்திவிருத்திக்கேதுவான வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் அதினால் பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுத்தப்பட மாட்டார் (4:30). கெட்ட வார்த்தை என்பது நேரடிப் பொருளில் "தேய்ந்து போன மற்றும் உபயோகிக்க தகுதியற்ற, ... *பிரயோஜனமற்றவை,*"[22] அது "நல்லவைகளுக்கு"

*முரணானது, "பயனற்றதும் யாருக்கும் பிரயோஜனமில்லாததுமாகும்"* என்று *ஆலோசனையாகச் சொல்லப்படுகிறது.*[23]

ஐக்கியத்தைக் கொடுக்கும் வார்த்தைகளை பேசுமிடத்தில், மற்றவர்களை கீழே இடறிப்போகச் செய்யத்தக்க வார்த்தைகளைப் பேசுமிடத்தில், எபேசியர்கள் **பக்திவிருத்திக்கு ஏதுவான நல்லவார்த்தை உண்டானால்** அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாக பேசும்படி ஊக்கப்படுத்தப்பட்டனர். சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் சபையில் பக்தி விருத்தி உண்டாகும்படி (கட்டியெழுப்பும்படி) செய்ய வேண்டும் (4:12, 16). சரீரம் கட்டியெழுப்பப்பட அங்கத்தினர்கள் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருக்கத் தக்கதாக ஊக்கப்படுத்தும் வார்த்தைகளைப் பேசுதல் மற்றும் அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைப்படி நடக்கச் சொல்லுதல். இப்படிப்பட்ட வார்த்தைகள் **கேட்கிறவர்களுக்கு எப்பொழுதுமே பிரயோஜனத்தைக் கொடுக்கும்.** "பிரயோஜனம் உண்டாகத் தக்கதாக" என்பது கேட்போர் "பயன்படும் வகையில்" பேசுவது.[24] பாத்திரராய் நடப்பதும் புதிதான ஆவியுள்ளவர்களாவதுமாகிய காரியங்களில் பவுல் 4:1-32ல், கவனம் செலுத்தினார், அவை கிறிஸ்தவன் சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டுவது.

## "ஆவியானவரைத் துக்கப்படுத்துவதிலிருந்து திரும்பி அவருக்கு சந்தோஷத்தைக் கொண்டு வருதல்" *(4:30)*

**30 அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாய்ப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.**

***வசனம் 30.*** இந்த எதிர்மறை நிகழ்கால முக்கியத்துவத்தின் பொருள், சுருங்கச் சொல்லின், "தேவனுடைய பரிசுத்த ஆவியை விலக்கப்பட்டவைகளை தொடர்ந்து செய்வதன் மூலம் துக்கப்படுத்துவதை நிறுத்துங்கள்." பரிசுத்த ஆவியின் ஏவுதலின் மூலம் தேவனுடைய வசனம் அறிவிக்கப்பட்டது (காண்க 1 கொரிந்தியர் 2:13; 2 தீமோத்தேயு 3:16, 17; 2 பேதுரு 1:19-21). வசனத்துக்கு செவி கொடுக்க மறுப்பது பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்பது (நடபடிகள் 7:51). பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்பது **பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவது.** பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவதில் நிலைத்திருப்பது ஆவியை "அவித்துப்" போடுதலாகும் (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:19). விசுவாசிகளுக்குள் ஒற்றுமையிருப்பதை பரிசுத்த ஆவி தேடுகிறார் (4:3), சபையின் ஐக்கியத்தை குலைத்துப் போடுவது எதுவாயிருந்தாலும் - இந்தக் காரியத்தில், கெட்ட வார்த்தையும் செயலும் - ஆவியைத் துக்கப்படுத்துகிறது. "துக்கப்படுத்துதல்" (*lupeo*) என்றால் "மனரீதியான அல்லது உணர்வுப்பூர்வமான வன் துன்பியலைக் கொடுப்பதும்."[25] மேலும் ஏசாயா 63:10 ஐ நினைவுபடுத்துகிறது அதில் இஸ்ரவேலரின் முரட்டாட்டத்தைக் குறித்துப் பேசினார் அவர்கள் தேவனுடைய "ஆவியை அவித்துப் போட்டார்கள்" என்றார்.

ஆவியை அவித்துப் போடாதிருப்பதற்கான ஊக்கத்தொகை, **மீட்பின் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்றீர்கள்** என்று பவுல் சேர்த்துக்

குறிப்பிட்டார். பவுல் இதை உறுதிப்படுத்தி எபேசியர்கள் கிறிஸ்துவுக்குள்ளான போது மீட்கப்பட்டார்கள் என்றார் (1:7) மேலும் அவர்களுடைய கடைசி மீட்பின் நாளுக்கென்று ஆவியானவரால் முத்திரை போடப்பட்டார்கள் (1:13, 14). ஆவியினால் முத்திரை போடுவது காலங்களின் முடிவில் அதாவது கிறிஸ்துவின் வருகையின் போது முழு சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அச்சாரம். கிறிஸ்தவர்கள் தேவனுடைய நற்குணங்களின் பரிசுத்தத்தால் முத்தரிக்கப்பட்டு தற்காலத்திற்கான நிலையாகவும் மகிமையுள்ள எதிர்காலத்திற்கான மகிமையாகவும் உறுதியளிக்கப்பட்டுள்ளனர். இங்கு பவுலின் வலியுறுத்தலாக சொல்லப்படுவது என்னவெனில் ஞானஸ்நானத்தின்போது கொடுக்கப்படும் ஆவி (காண்க நடபடிகள் 2:38) அவர்களின் நித்திய வீட்டிற்கான அச்சாரத்தை கொடுக்கப்படுவதன் அடையாளமே முத்தரித்தல் என்றார், ஆகையால், அவர்களுடைய தற்போதைய வாழ்க்கை வார்த்தையாலும் செயலாலும் அமைந்திருக்குமே யாகில் ஆவியானவருக்கு அது சந்தோஷத்தைக் கொண்டு வரவேண்டுமேயன்றி துக்கத்தையல்ல.

## "கசப்பான எண்ணத்திலிருந்து திரும்பி இளகிய இருதயமுள்ளவர்களாகுதல்" (4:31, 32)

**31 சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது. 32 ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.**

**வசனங்கள் 31, 32.** பவுல் தனது விவாதத்தை 4:1-32 வுடன் தனது இறுதி எச்சரிக்கை மற்றும் அறிவுரைகளை முடிவுக்கு கொண்டு வருகிறார். இந்த உபதேசங்களெல்லாம் உள்ளத்தில் புதிதான ஆவியுடையவர்களாவதுடன் ஒத்துப் போகிற தன்மையும் புதிய மனுஷனைத்தரித்துக் கொண்டதுமாகும். ஆறு குறிப்பிடத்தக்க தீய ஒழுக்கங்களை தவிர்க்கும்படி சொல்லுகிறார்.

1. **கசப்பு** (*pikria*) "இருதயக் கடினமுள்ளவர்களாய் கடந்த கால எண்ணங்களை இருதயத்தில் தொடர்ந்து வைத்துக் கொண்டிருத்தல்."
2. **கோபம்** (*thumos*) என்பது "கோபத்தில் வெடிப்பது" என்று பொருள்.
3. **மூர்க்கம்** (*orgē*), வசனம் 26ல் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது, "இடைவெளியற்ற பட்சிக்கிற பகைமையுணர்வு."
4. **கூக்குரல்** (*kraugē*) என்பது "மூர்க்கத்தின் வெளிப்பாடு," கத்தி கூச்சலிடுதல்.
5. **தூஷணம்** (*blasphēmia*) பழிசொல்லி, தூற்றுதல் வார்த்தைகளைப் பேசுதல் என்று பொருள்.
6. **துர்க்குணம்** (*kakia*) மற்றவர்களைத் துன்புறுத்த பேசும்

பேச்சுக்களோ அல்லது செயல்களோ போன்றவற்றை உட்படுத்தியது.[26]

*இந்த தீய ஒழுக்கங்கள் புதிதாக்கப்பட்ட உள்ளத்திற்கு உரியவைகளல்ல, அவை* ***களைந்து போடப்பட வேண்டியவை,*** *இவை airo என்ற அவசரத்தைக் குறிப்பிடும் சொல் அதன் பொருள் ஒன்றை விரைவாக செயல்படுத்துவதைக் குறிப்பிடுகிறது. இந்த விஷயத்தில், எபேசியர்கள் உடனடியாக "தூக்கி, உயர்த்தி ... அப்புறப்படுத்தி ... கொண்டு செல்ல" (அப்புறப்படுத்த வேண்டிய) தீய ஒழுக்கங்களாக குறிப்பிடப்படுகிறது.*[27]

*இந்தத் தீய ஒழுக்கங்கள் களைந்து போடப்பட்ட இடத்தில், அவர்களுடைய வாழ்க்கையிலே சேர்க்கப்பட வேண்டிய மூன்று ஒழுக்கங்களையும் குறிப்பிடுகிறார். இந்த ஒழுக்கங்கள், ஒரு ஒற்றுமையுள்ள சமுதாயத்தை கட்டியெழுப்ப உதவிசெய்யக் கூடும், மாறாக தீய ஒழுக்கங்களுக்கு இடங்கொடுத்தல் அவை சமுதாயத்தையே சீரழித்து விடும். ஒருவருக்கொருவர்* ***தயவாயிருத்தல்*** *என்பது தற்போதைய அவசரமானதும் தொடர்ந்து செயல்படவேண்டியதுமான ஒரு காரியம். "தயவு" என்பது chrēstos என்பதன் மொழிபெயர்ப்பு, அது "நல்லவர்களாக இருத்தல், சாந்தகுணமுடையவர்களாக இருத்தல், தரும சிந்தையுடையவர்களாயிருத்தல் ... அது நன்றியறிதல் இல்லாமலிருந்தாலும் என்று பொருள்"*[28] *மனதுருக்கம் உள்ளவர்களாயிருத்தல் (eusplanchnos) என்பது "இரக்கப்படுவதைப் போன்ற" வார்த்தை.*[29] *Eusplanchnos என்பதன் நேரடிப்பொருள் "ஆரோக்கியமான குடல்கள்."*[30] *Splanchnon என்றால் வயிற்றின் உட்பகுதிகளைக் குறிக்கும். பெரும்பாலும் இந்த வார்த்தை "இருதயம்" என்றே மொழிபெயர்க்கப்படுகிறது ஏனெனில் குடல் பகுதிகள் உணர்ச்சி வசப்படுகிறவைகளுக்கான இருப்பிடமென்று கருதப்படுகிறது.*[31] ***ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்*** *என்பது கிறிஸ்து மூலமாக தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டிருப்பதன் மூலம் செயலூக்கம் அளிக்கப்பட்டது. நிருபத்தின் முதல் அரைப்பகுதியில், பவுல் எபேசியர் பெற்றிருந்த இந்த மன்னிப்பை வலியுறுத்தினார். 4:1-32 ல், பெற்றுக் கொள்ளப்பட்ட மன்னிப்பை வாழ்வில் காட்ட வேண்டும் என்பதையும் சபையின் சமுதாயத்துக்குள்ளாக கைக்கொள்ளப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்துகிறார் (காண்க மத்தேயு 6:14, 15).*

*4:17-32 ன், அறிவுரைகளின்படி, பவுல் எபேசியர் நிருபத்தின் கைக்கொள்ளப்பட வேண்டிய பகுதியை முதல் பாகமாக நிறைவு செய்தார். சபையின் அங்கத்தினர்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராய் அவர்கள் நடந்து கொள்ளவும் ஐக்கியமாயிருந்து புதிதான ஆவியுள்ளவர்களாய் நடந்து கொள்ளவும் வேண்டும்.*

## கைக்கொள்ளுதல்

***உயிர்த்தெழுதல் நடையில், ஆடைதரித்துக் கொள்ளுதல் (4:17-32)***

*யோவான் 11ல், இயேசுவின் பால்ய சிநேகிதன் லாசரு, மரித்திருந்தான். இயேசு பெத்தானியாவுக்குப் போய் சேர்ந்த வேளையில், லாசரு கல்லறையில் வைக்கப்பட்டு நான்கு நாட்கள் ஆகியிருந்தது. கல் லறையின் நுழைவாயிலிலிருந்து கல்லை புரட்டும்படி இயேசு சொன்னபோது,*

மார்த்தாள் அவருக்கு மறு மொழியாக, "ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே" என்றாள் (யோவான் 11:39) இயேசுவின் வற்புறுத்தலால் கல்லானது புரட்டிப் போடப்பட்டது. பிறகு அவர் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு, "லாசருவே வெளியே வா" என்று சொன்னார் (யோவான் 11:43). வசனம் சொல்லுகிறது, "அப்பொழுது மரித்தவன் வெளியில் வந்தான். அவன் கைகளும் கால்களும் பிரேத சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவனுடைய முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்" (யோவான் 11:44). லாசரு இதற்கு மேலும் மரணத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கவில்லை, அவன் உயிர்த்தெழுந்து வந்தான். அவன் செய்ய வேண்டிய முதல் காரியம் பிரேதசீலைகளிலிருந்து கட்டவிழ்க்கப்பட வேண்டும். இப்பொழுது உயிருள்ளவனாக இருக்கிறபடியால் உயிருள்ளவனுக்குப் பொருத்தமான ஆடையைத் தரிக்க வேண்டியதாயிருந்தது.

ஒத்ததன்மையின் வழியாக, பவுல் இங்கே எபேசியருக்கு எழுதின நிருபத்தில் அதைத்தான் சொல்லிக்கொண்டிருந்தார். அதிகாரம் 2ன்படி, எபேசியர்கள் தேவனுக்கு முன்பாக தங்கள் பாவங்களிலே மரித்திருந்தார்கள், ஆனால் அவர் அவர்களை எழுப்பி புதிய ஜீவனைக் கொடுத்தார். ஒருவர் ஆவிக்குரிய கல்லறைத் துணிகளை களைந்து போட்டு உயிர்த்தெழுதல் முறையிலான ஆடைகளைத் தரித்துக் கொள்வது எப்படி? பவுல் இது குறித்துப் பேசும் போது, மூன்று பிரிவுகளில் அப்படிக் காட்டுகிறார்.

(1) *முந்தின கெடுதிகள் (4:17-19).*

> ஆதலால் கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக் கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களை காம விகாரத்துக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள் (4:17-19).

"புறஜாதிகள்" என்று மேலே குறிப்பிடப்பட்ட இடத்தில் "அமெரிக்கர்கள்," "ஐரோப்பியர்கள்" அல்லது வேறு ஏதாவது வார்த்தைகளைப் பயன்படுத்திப் படித்தால் பவுல் இந்தப் பத்தியை இன்று காலையில்தான் எழுதியிருக்கக் கூடும் என்று நாம் நம்பக் கூடியதாயிருக்கும். அது விரிவான விளக்கம் தருகிற பலதரப்பட்ட சமுதாயங்களின் நிலைமை.

இயேசுவை அறியாதவர்களைக் குறித்த எண்ணங்களின் நடைமுறைகளை பவுல் விவரித்தார்: அவர்களுடைய சிந்தனைகள் வீணானவைகளும், அவர்களுடைய புத்தியில் அந்தகாரமும் காணுகிறது; அதன் விளைவு, அவர்கள் அறியாமையுள்ளவர்களானார்கள். அவர்கள் வெறுமையான மனதையும், அந்தகாரப்பட்ட புரிந்து கொள்ளுதலையும், உள்ளான அறியாமையும் உடையவர்களானார்கள். குழப்பமடைந்த - மனதால் குழப்பமுள்ள - வாழ்வைப் பெற்றார்கள். அவர்கள் உணர்ச்சியற்ற தன்மையையும், சிற்றின்ப பற்றுடையவர்களும், நிலையற்ற பாலுணர்வும் கொண்டவர்களாகின்றனர்.

*4:17-19ன் திறவுகோல் வார்த்தை "கடினப்படுத்துதல்" இருதயத்தை கடினப்படுத்தினவர்களெல்லாம் அறியாமையினால் நிரப்பப் பட்டிருக்கிறார்கள். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் கற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். அவர்களுடைய அறியாமையினால் அவர்களுடைய செயலின் உண்மையான அறிகுறியை அறிந்து கொள்ள இயலாமலிருக்கிறார்கள். "கடினம்" என்று பவுல் சொல்லுவதன் மூல அர்த்தம் ஒரு மார்பிள் கல்லைக் காட்டிலும் கடினமான கல் என்று பொருள்படுகிறது. பின்னதாக, மருத்துவர்களால் ஒரு நபரின் மூட்டுக்களில் படியும் படிவம், அந்த மூட்டுக்களை வளைய விடாமல் தடுப்பது போன்ற செயல் என்று விளக்கமளித்தனர். மேலும் அது ஒரு எலும்பு முறிவடைந்து சுகமளிக்கப்பட்டபின் அந்த இடத்து எலும்பு கடினமாகி எலும்பைவிட கடினமாயிருக்கும் தன்மைக்குப் பயன்படுத்தப்பட்டது. இறுதியாக, இந்தவார்த்தை உணர்ச்சி யற்றுப் போகும் தன்மையைக் குறிக்கவும் பயன்படுத்தப்படும். ஏதோ ஒன்று மிகவும் கடினமாக இருப்பதை, மிகவும் கல்லாய் சமைந்து போய், உணர் வடையும் திராணி இல்லாமல் போதலைக் குறிப்பிட்டது.*

*பவுலின் போதனைப்படி, தேவனுக்குப் புறம்பேயிருக்கிற மனுஷனுடைய நிலைமை இதுதான். பாவம் அவனுடைய இருதயத்தை கல்போல் இறுக்கமடையச் செய்கிறது, உண்மையான மதிப்பை உணர முடியாமல் செய்கிறது. அவன் சத்தியத்தின் சாத்தியக்கூறுகளை கைவிட்டு நல்லதுக்கும் கெட்டதுக்குமான ஒரு தவறான அளவுகோலை தானாக வைத்துக் கொள்கிறான். இதன் விளைவாக ஒரு இறுமாப்போடு கூட கெடுதிகளைத் திட்டமிட்டு தன் வாழ்வுமுறையை அமைத்துக் கொள்கிறான். ஆனாலும் அது ஏதோ சாதாரணமான நடத்தையின் வாழ்வு முறையாகக் காணுகிறான். வெட்கம் அவனிடமிருந்து எடுபட்டு போயிற்று. நாகரிகம் மறந்து போயிற்று. அப்படிப்பட்ட நிலையில், ஒரு நபர் தனது சொந்த ஆசாபாசங்களுக்கு தானே இரக்கம் காட்டிக் கொள்கிறான்; அவன் யாருடைய வாழ்வைக் கெடுக்கிறான் என்றோ அல்லது யாருடைய கபடற்றத்தன்மையை அழிக்கிறான் என்றோ கவலைப்படுவதில்லை, தனது சொந்த ஆசைகளெல்லாம் நிறைவேறுகிறவரை அதிலே திருப்திப்பட்டுக் கொள்வான்.*

*நாம் இயேசுவை சந்திப்பதற்குமுன், நாம் அந்த பழைய கேடுகளில் சிக்க வைக்கப்பட்டோம், நமது சிந்தனைகளில் குழம்பிப் போயிருந்தோம். நம்மிலே சிலர் பொய்யர்களாகவும், அல்லது வஞ்சிக்கிறவர்களாகவும் அல்லது திருடுகிறவர்களாகவும் இருந்தோம். அநேகர் இரட்டை வேஷம் போடுகிறவர்களாகவும் புறங்கூறுகிறவர்களுமாயிருந்திருக்கிறோம். ஒருவேளை வெற்றியின் ஏணியில் ஏற ஏதுவான தேவை எதுவாயினும் அதற்கு ஜனங்களை சாதகமாக்கியிருப்போம். இப்பொழுது அவைகள் அனைத்தும் மாறிப் போயிற்று.*

*(2) புதிய சிருஷ்டி (4:20-24). கிறிஸ்துவுக்குள் வருகிற உள்ளத்தில் புதிதாக்கப்படுதல் மூலமாக நாம் மரணத்தின் போர்வையைக் களைந்து போட்டு உயிர்த்தெழுதலின் வாழ்வு முறையாகிய போர்வையைத் தரித்துக் கொள்கிறோம். அந்த நடைமுறையில் இருப்பவர்கள் நான்கு தகுதி களையுடைவர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றனர்.*

*சுயத்தை மையமாகக் கொண்டிருந்ததிலிருந்து நாம் கிறிஸ்துவை*

*மையமாக்கிக் கொள்கிறோம் (4:20). கிறிஸ்துவைக் அறிந்துகொள்ளுதல் என்றால் என்ன? இதன் பொருள் அவர் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அப்படியே ஏற்றுக் கொள்ளுதல். அதற்குப் பின்பும் நாம் நமது தனிப்பட்ட சபலங்களையோ ஆசைகளையோ விரட்டிப்பிடிக்கப் போக மாட்டோம். மாறாக, நாம் இயேசுவை அறிந்து கொள்கிறோம் - அவரது ஆசைகள் எதுவோ, அவருடைய பிரியம் அதுவே, அருடைய விருப்பம் எதுவோ அவைகளை அறிந்து கொள்ளுதல். வாழ்வின் மையம் என்பது இனியும் சுயம் அல்ல. ஆனால் கிறிஸ்துவே.*

*நாம் அறியாமையின் இடத்தில் சத்தியத்தை வைக்கிறோம் (4:21). நாம் இயேசுவை அறிவோமானால், சத்தியம் என்ன என்பதும் நமக்குத் தெரியும். இயேசு யூதர்களிடம்: "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் ... சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் (யோவான் 8:31, 32), கெட்டுபோகிற காரியங்களிலிருந்து தப்பிக்கும் வழி சத்தியம் மட்டுமே. சத்தியம் உலக வாழ்க்கையின் முறைகளை இருக்கிற வண்ணமாகவே காணச் செய்கிறது, மேலும் அதில் சரியான தீர்ப்பையும் செய்ய உதவுகிறது. இயேசுவே சத்தியமாக இருக்கிறார்; அவரை அறிதல் என்பது ஒரு அசைவில்லாத, மாற்றம் பெறாத வாழ்வு நெறிக்கு ஒரு சரியான அளவுகோலாக இருக்கும்.*

*வெட்கமற்ற காரியங்களிலிருந்து நாம் தூய்மைக்குப் போகிறோம் (4:22). முன்பு, பாவத்தின் குற்ற உணர்வு அற்றவர்களாயிருந்தோம். இயேசுவுக்குள் நாம் தலையாய - உணர்வைப் பெற்று பாவத்தை உணருகிறோம் மேலும் எவ்வகையிலும் அதைத் தவிர்க்கிறோம். வாழ்வில் தூய்மையே புதிய சிருஷ்டியான ஒருவரின் தலையாய அக்கறையாயிருக்கிறது.*

*பாவத்தைப் பற்றிய விழிப்புணர்வையும் நமது செயலூக்கத்தையும் தூய்மையாய் காக்காமல் இழந்து போதல் சாத்தியமே. பழைய இடங்களுக்கு நாம் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தாலோ, முன்பு நண்பர்களாக இருந்த ஜனங்களோடே தொடர்ந்து நட்புறவு கொண்டிருந்தாலோ, இயேசுவை அறிவதற்கு முன்பு நாம் பங்கு பெற்ற பழைய செயல்கள் இன்னும் நம்மை அடையாளப் படுத்துமானாலோ, பாவத்தைக் குறித்த குற்ற உணர்வுகளை நாம் இழந்து போவோம். அது அப்படி நடந்துவிடுமானால், நாம் நீதிமானாக இருக்க விழையும் செயல் திறனை நாம் இழந்துபோவோம்.*

*தேவன் நம்மை பாவத்துக்கு பயப்படும்படி எதிர்பார்க்கிறார். நமது கடந்த காலவாழ்வின் முறை குறித்து வெட்கப் படவேண்டும். பாவமுள்ள காரியங்களை நம்மைச் சுற்றிலும் தொடர்ந்து இருக்கும்படி வைத்துக் கொண்டிருந்தால் பிறகு தேவன் கிறிஸ்துவுக்குள் வாழவேண்டிய முறைப்படி நாம் வாழ செயல் தூண்டுதலால் கொடுத்த ஊக்கத்தை இழக்க வேண்டியதுதான்.*

*இனியும் நாம் கொள்கைப் பிடிப்பற்ற மனதையுடையவர்களல்ல; மாறாக, நாம் புதிதாக்கப்பட்ட மனதையுடையவர்கள் (4:23). மாற்றம் பெற்ற மனதிலிருந்துதான் மாற்றம் பெற்ற வாழ்வு துவங்குகிறது. புதியவர்களாய் நாம் நடந்து கொள்ள முதலாவதாக நாம் புதியவைகளைச் சிந்திக்க வேண்டும். பவுல் ரோமர்களுக்குச் சொன்னார், "நீங்கள் இப்பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷம் தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான*

*சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2).*

*நாம் எப்படி நமது மனதை புதிதாக்குவது? தேவபக்திக்குரிய சிந்தனைகளை நினைக்கத் துவங்கும் திறமை அறிவினால் வருகிறது. கொலோசெயர் 3:10 ல், பவுல், "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே," என்று எழுதினார்.*

*நாம் உணர்ச்சி வசப்படுவதினாலே அல்ல, அறிவினாலே மறு ஆற்றல், மனஎழுச்சி, மற்றும் பிரயோஜனமானவைகளை நடப்பிக்கிற திறமையும் கொண்ட கிறிஸ்தவர்களாக மாறுகிறோம். அறிவு தேவனுடைய வசனத்தின் மூலம் வருகிறது. நமது மனதை அவருடைய வசனத்தால் முழுமை யாய் நிறைக்கும்போது, நாம் தேவபக்தியின் சிந்தனையை நினைக்கத் துவங்குகிறோம். அது நம்முடைய வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும். நாம் "மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத்தரித்துக் கொள்ளுவோம்" (4:24).*

*(3) நிகழ்கால நடத்தை (4:25-29). நாம் ஆவிக்குரிய கல்லறைச் சீலைகளை களைந்து போட்டு நம்முடைய உண்மையான நீதியிலும் பரிசுத்தத்திலும், புதிய வஸ்திரங்களைத் தரித்துக் கொள்ளவேண்டுமானால் நடைமுறை வாழ்க்கையில் அதன் பொருள் என்ன? இயேசுவை நோக்கி மறுரூபத்திற்காக ஏறெடுத்து பார்க்கும்போது நாம் மாற்றம் பெறுவது எப்படி என்பதற்கு பவுல் சில உதாரணங்களைக் கொடுத்தார்.*

*நேர்மையற்ற தன்மையுள்ள இடத்தை சத்தியம் நிரப்புகிறது (4:25). தாங்கள் விரும்புகிறதைப் பெற ஜனங்கள் பொய்யைப் பேசும்படி சோதிக்கப்படுகிறார்கள். ஆனால் நாம் அதை இனியும் செய்ய வேண்டியதில்லை. கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்க்கையில் பொய்க்கு பங்கில்லை. பவுல் பொய் என்று சொல்லுவது எல்லா வகையிலும் பொருந்தும், அவை உண்மை யைத் திரித்துக் கூறுதல், மிகைப்படுத்துதல், பள்ளியிலோ வியாபாரத்திலோ ஏமாற்றுதல், வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறுதல், சாக்குப்போக்குகளைச் சொல்லுதல் மற்றும் நமது பணியையோ அல்லது உற்பத்தி பொருட்களையோ தவறாகப்பயன்படுத்துதல். ஆகியவற்றை உள்ளடக்கியது.*

*பொய்யைக் கொல்ல சத்தியத்தை சொல்ல வேண்டும். நாம் எங்கிருந்தாலும் சரி, உண்மையையே சொல்ல வேண்டும். மேலும், நாம் அன்பினாலே சத்தியத்தைப் பேச வேண்டும் (காண்க 4:15). நாம் சொல்லுவது மாத்திரமல்ல, சிலவற்றை நாம் எப்படிச் சொல்லுகிறோம் என்பதும் கூட, நம்மை புதிய சிருஸ்டிகளாக அடையாளப்படுத்துகிறது. நாம் பேசும் சத்தியம் நம்முடைய அன்பினால் பேசி நாம் பேசுகிற நபர்களிடம் மன நெகிழ்வை ஏற்படுத்துவதாயிருக்க வேண்டும்.*

*உண்மையுள்ளவர்களாய் இருக்கிறோம் என்பதற்கு நம்முடைய வேறு செயலூக்கங்கள் என்ன? "நாம் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறோம்." நமது வாய் இருக்குமிடத்தின் பகுதியைக் குறித்து நமது மூளை நமது கைகளிடம் பொய்யைச் சொல்லுமேயாகில் எப்படிப்பட்ட கடின நிலைமையை நாம் அடைவோம். சாப்பிட முயற்சிக்கும்போது அது எதிர்பாராத விபத்தாக முடியும். சரீரத்தில் இருக்கும் அவயவம் ஒன்றுக் கொன்று உண்மையில்லாதே*

போனால் அந்த சரீரம் முறையாக இயங்காது.

கட்டுப்படுத்தப்படாதவைகளை கட்டுப்படுத்தப்பட்ட உணர்வுகள் இடமாற்றுகின்றன (4:26, 27). கோபப்படுதல் தேவன் கொடுத்த உணர்வு என்பதால், கோபப்படுதல் தன்னில்தானே தவறு அல்ல. இயேசுவும்கூட சில வேளைகளில் கோபப்பட்டார் (காண்க மாற்கு 3:5). கோபம் அடிக்கடி நாம் செய்யும் படி எது வழி நடத்துகிறதோ அதுவே தவறானது.

செய்தித்தாள்கள் வீட்டுச் சண்டைகள், துப்பாக்கி சூடு, மற்றும் வேறு வன்முறைகளைப் பற்றிய செய்திகளைப் பேசுகிறது. கட்டுப்படுத்த இயலாத கோபாவேசங்கள் எழும்புகின்றன.

பவுல் நாம் அப்படி நடந்து கொள்ளக் கூடாது என்று சொன்னார். கோபத்திலும் கூட, நாம் பாவம் செய்து விடக் கூடாது. நம்முடைய உணர்வுகளை நாம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். நம்மை ஒருவர் கோபப்படுத்தி விட்டால், இன்றே நாம் அதை அமைதியான முறையில், கையாள வேண்டும். கோபத்துக்குமேல் கோபம் குவிக்கப்படவோ நாளுக்கு நாள் அது புரையோடவோ விட்டுவிடக் கூடாது. நாம் அப்படிச் செய்வோமானால், நாம் தவறான வழியில் இருக்கிறோம் என்று நாமே அறிந்து கொள்ளலாம், மாறாக, நாம் முதல் முறையாக மற்றவர்களிடம் கோபிக்கும்போது, அந்த சகோதரனிடத்திலோ சகோதரியினிடத்திலோ அன்புடன் அணுகி பிரச்சனைக்குரிய விஷயத்தைக் கையாள வேண்டும். அதை நாம் செய்யத் தவறும்போது, நம்முடைய வாழ்க்கையிலே சாத்தான் அடியெடுத்து வைக்க இடமளிக்கிறோம். காலப்போக்கில் தனது கோபத்தால் அவன் நம்மை அழித்து விடக் கூடும்.

திருடும் இடத்தை தளராத உழைப்பு பிடிக்க வேண்டும் (4:28). திருடுதலைக் குறித்து பவுல் பொதுவான முறையில் பேசினார், ஆனால் நாம் சில குறிப்பிட்ட வகையில் காண்போம், கிறிஸ்தவன் ஒரு காரையோ அல்லது கைப்பிடியளவு திராட்சப்பழங்களையோ சந்தை வெளியில் திருடிவிடக் கூடாது. கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாயிருக்கிற நாம், பொய்யான பதிவேடுகளை எழுதுவதோ அல்லது கடன்களைத் திரும்பிச் செலுத்த மறுப்பதோ கூடாது. ஒரு பொருளை வாங்கும்போது கொடுக்கும் பணத்திற்கு மீதி சில்லரையை மிகுதியாகக் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளக் கூடாது, தவறு நேர்ந்திருந்தால் சரிசெய்து கொள்ள வேண்டும்; அதிகமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அதையும் சரி செய்ய வேண்டும். கேள்வியென்னவெனில் திருட்டுகளில் ஏதோ ஒன்று அல்லது ஒரு சிறிய திருட்டு என்று சொன்னாலும், பவுலின் பதில் ஒன்றுதான்: "திருடாதே."

கெட்ட வார்த்தைகள் இருக்குமிடத்தை நல்ல வார்த்தைகள் பிடிக்க வேண்டும் (4:29). புது சிருஷ்டிகளாகிய நாம், நமது வார்த்தைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் இனியும் பழைய கெட்டுப்போன வழிகளில் இல்லை என்று உலகத்திற்கு துரிதமாய்க் காட்ட அவசர வழி நமது வாயைச் சுத்தப்படுத்துவதுதான். பவுல், "கெட்ட வார்த்தை ஒன்றும் (நேரடிப் பொருளில் "அழுகிப் போன" வார்த்தை) உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்" என்று சொன்னார். நாம் சபிக்கும் வார்த்தைகளையும், புறங்கூறுதலையும், வீண் அலப்புதல் களையும், முறையற்ற வேடிக்கைப் பேச்சுக்களையும் தவிர்க்க வேண்டும். அனைத்துவித எதிர்மறைக்காரியங்களையும் வழிகளையும்

களைந்து விட்டு கெட்ட வார்த்தைகளைப் பேசுகிறதற்குப் பதிலாக நமது வாய்களை உற்சாகம் கொடுப்பதும் மற்றவர்களை கட்டியெழுப்பக் கூடியதுமான வார்த்தைகளைப் பேச பயன்படுத்த வேண்டும் - அந்த வார்த்தைகள் கிறிஸ்துவை பிரதிபலிப்பவைகளாயிருக்க வேண்டும்.

*முடிவுரை.* எபேசியர் 4:30 சொல்லுகிறது, "நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்." நாம் மறுபடியும் பிறந்த அந்த நாளிலே, தேவன் நம்மை முத்தரித்ததன் மூலம் அடையாளப்படுத்தி நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்று காட்டப்பட்டது (காண்க 1:13, 14). அவர் நம்மில் வாசம் பண்ணுகிறபடியால், நாம் அவருக்கு சந்தோஷத்தைக் கொண்டு வரலாம் அல்லது ஏமாற்றத்தைக் கொடுக்கலாம். நாம் அவருக்குத் துக்கத்தைக் கொடுப்பதில்லை என்று எப்படி நாம் உறுதிப்படுத்திக் கொள்வது? "சகலவித கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தக் துர்க்குணமும், உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களை மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (4:31, 32).

நாம் மீட்கப்படாத மக்களைப் போல உடையணிந்து அவர்களைப்போன்ற எண்ணங்களையும் செயல்களையும் கொண்டிருப்போமானால், ஒரு உயர்ந்த வாழ்க்கை முறைக்கு நம்மை அழைத்திருக்கிற ஆவியானவரை நாம் துக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம், ஆவிக்குரிய ரீதியிலான மரித்தோரின் ஆடைகளை நாம் நீதியின் வஸ்திரங்களால் மாற்றம் செய்யும்போது, நாம் முறையான வஸ்திரம் தரித்தவர்களாகிறோம், அது உயிர்த்தெழுதலின் வாழ்க்கைமுறை, அது கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வைக் கொடுத்த, ஆவியானவரை சந்தோஷிப்பிக்கும்.

கிறிஸ் புல்லார்டு

---

குறிப்புகள்

[1]Andrew T. Lincoln, *Ephesians*, Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 277. [2]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament,* 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1991), 953–54. [3]S. D. F. Salmond, "The Epistle to the Ephesians," in *The Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 3:340. [4]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 508. [5]Kenneth S. Wuest, *Wuest's Word Studies from the Greek New Testament for the English Reader: Ephesians and Colossians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 107. [6]Salmond, 340. [7]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 169, 111. [8]Lincoln, 280. [9]Wuest, 109. [10]Lincoln, 284. [11]Wuest, 110. [12]Ibid. [13]Zodhiates, 869, 866. [14]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 499. [15]Wuest, 111. [16]Salmond, 345. [17]Wuest, 112. [18]Lincoln, 302. [19]Adapted from Wuest, 114–15. [20]Zodhiates, 867. [21]Lincoln, 304.

[22]Salmond, 347. [23]Ibid. [24]Lincoln, 306. [25]Bauer, 604. [26]These definitions are given in Lincoln, 308–9; Wuest, 117. [27]Zodhiates, 882. [28]Bullinger, 431. [29]Wuest, 117. [30]Bauer, 413. [31]Ibid., 938.